INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. மலர்


✦ மொட்டு 22 ✦ மலர் 50
✦ நவம்பர் 2025 - மார்ச் 2026
(தனிச்சுற்றுக்கு மட்டும்)


மகளிர் சுய உதவிக் குழு புத்துணர்ச்சி இதழ்

*Dividend 2025*



IVDP
SINCE 1979

ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்களின்
2025ஆம் ஆண்டிற்கான

## இலாபப் பங்கீடு
## ₹ 93.44 கோடி

# நிறுவனர் இதயத்திலிருந்து...

அன்புள்ளம் கொண்ட

**உறுப்பினர்களே! ஊக்குநர்களே!**

அனைவருக்கும் வணக்கங்களும், வாழ்த்துக்களும்...

புத்துணர்ச்சியோடு 2026 ஆம் புத்தாண்டில், உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், உறுப்பினர்கள் மற்றும் சமூகம் அடைந்திருக்கும் முன்னேற்றத்திற்கும் உங்களின் ஒத்துழைப்பும் நம்பிக்கையும் முக்கிய அடித்தளமாக இருப்பதை உணர்ந்து, தங்களின் பொருளாதார ரீதியான முன்னேற்றத்திலும், உங்கள் குழந்தைகளின் வளர்ச்சியிலும் ஐ.வி.டி.பி கரம் கொடுத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

உறுப்பினர்களின் நலனில் அக்கறையோடு செயல்பட்டு வரும் ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை முகாம் மற்றும் உயர்சிகிச்சைத் திட்டத்தில் இன்னும் பங்கேற்காதவர்கள், உடனடியாக பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு உயிரும் விலை மதிப்பற்றது என்பதை நமது ஐ.வி.டி.பி. நிறுவனமும், நானும் நன்கு உணர்ந்ததன் விளைவாகவே இத்திட்டத்தைக் கொணர்ந்து செயல்படுத்தி வருகிறோம். **இதுவரை இத்திட்டத்திற்காக மட்டும் ரூ. 12.57 கோடியை செலவிட்டுள்ளோம்.**

அவ்வகையில் எதிர்பாராத சூழ்நிலைகளில் காப்பாற்ற முடியாத உயிர்கள் மற்றும் இயற்கை மரணம் ஏற்படும் போதிலும் கூட உங்கள் குடும்பத்திற்கான பாதுகாப்பாகவும், பொருளதார ரீதியான உறுதுணையாகவும் கடந்த 2025 ஆம் ஆண்டு பல்வேறு காரணங்களால் மறைந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு **ரூ. 7.06 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக** வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

## உள்ளே...


| | |
|---|---|
| வாழ்க்கை பாதுகாப்பு நிதி | 04 |
| ஐ.வி.டி.பி. இலாபப் பங்கீடு | 06 |
| ஐ.வி.டி.பி. விதவை உறுப்பினர்களின் கல்வி உதவித்தொகை | 07 |
| ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் முகாம் | 12 |
| ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் முக்கிய கவனத்திற்கு | 16 |
| ஐ.வி.டி.பி. கல்விப் பணிகள் | 20 |
| ஐ.வி.டி.பி. கல்விச் சேவைகள் | 23 |
| ஐ.வி.டி.பி. சமூகச் சேவைகள் | 28 |
| கவிதை | 31 |


**தவறாமல் படிக்கவும்...**

**ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் முக்கிய கவனத்திற்கு**

பக்கம் எண் 16, 17, 18, 19



மேலும் நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம் இயங்கும் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் **இதுவரை ரூ. 9863.40 கோடி வங்கிக் கடன், ரூ. 5,388.11 கோடி சங்கக் கடன், ரூ.526.77 கோடி ஐ.வி.டி.பி கடன், ரூ. 295.90 கோடி சுகாதாரக் கடன் என மொத்தம் ரூ. 16,074.18 கோடி கடன் சுழற்சி** செய்து, தங்களின் தேவைகளை நிறைவு செய்து கொண்டுள்ளனர் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.

நம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு கல்வி மிக முக்கியமானது. இதனை கருத்தில் கொண்டு, மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் மற்றும் பல்வேறு கல்வி உதவிகள் என இதுவரை **ரூ. 52 கோடி** வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

மேலும் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் தையற்பயிற்சி மற்றும் கணினிப் பயிற்சி வகுப்புகளில் இதுவரை **1172 உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகள் பற்கேற்று பயனடைந்துள்ளனர். இப்பயிற்சி வகுப்புகளுக்காக மட்டும் இதுவரை ரூ. 33.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.** உறுப்பினர்கள் அனைவரும் பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டும் நிறுவனத்தின் செயல்திறன் சிறப்பாக அமைந்துள்ளதாலும், உங்கள் அனைவருடைய உழைப்பின் பலனாகவும், **கடந்த 2025 ஆம் ஆண்டிற்கான இலாபப் பங்கீடாக 6214 குழுக்களிலுள்ள 1,06,689 உறுப்பினர்கள் ரூ.93.44 கோடியைப் பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்டுள்ளனர் என்பது பெருமைக்குரியது.** வரும் ஆண்டுகளிலும் மேலும் பல உறுப்பினர்கள் இலாபப் பங்கீட்டைப் பெற்று பயனடைய வாழ்த்துகிறேன்.

ஐ.வி.டி.பி யின் அனைத்து சேவைகளும் உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் செயல்படுத்தப்பட்டு, இதுவரை **மனித நேயப் பணிகளுக்காக மொத்தம் ரூ. 181.69 கோடி**யை செலவிட்டு சமூகப் பொறுப்புடன் செயலாற்றி வருகிறோம். இச்சேவை மேன்மேலும் தொடர உங்கள் ஒத்துழைப்பை வழங்கி, நமது நிறுவனத்தையும், நமது குழுக்களையும் மேன்மேலும் செம்மைப்படுத்துவோம்.

*என்றும் உங்களுடன்,*

"ராமன் மகசேசே"

**குழந்தை பிரான்சிஸ்**

நிறுவனர் / தலைவர்



2025 ஆம் ஆண்டு

*மறைந்த*

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு

உறுப்பினர்களின்

**1289 வாரிசுதாரர்களுக்கு**

# வாழ்க்கை பாதுகாப்பு நிதி

# ₹ 7.06 கோடி




> " ஒருவரின் இழப்பை சரிசெய்வது
> நம் அனைவரின் பொறுப்பு "

என்ற உயர்ந்த எண்ணத்தை நடைமுறையில் கொண்டு, ஒருவரின் நம்பிக்கையை நலமாக மாற்றும் ஒரு மனிதநேய முயற்சியே ஐ.வி.டி.பி. யின் வாழ்க்கைப் பாதுகாப்பு திட்டம்.

ஐ.வி.டி.பி சுய உதவி குழு உறுப்பினர்களின் நலனையும், அவர்களின் குடும்பங்களின் எதிர்கால பாதுகாப்பையும் உறுதி செய்யும் நோக்கில் ஐ.வி.டி.பி நிறுவனம் செயல்படுத்தி வரும் முக்கியமான திட்டங்களில் முக்கியமானது வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி திட்டமாகும். இத்திட்டம் எதிர்பாராத சூழ்நிலைகளில் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு பொருளாதார ஆதரவாகவும், மன உறுதியை வழங்கும் ஒரு பாதுகாப்பு கவசமாகவும் விளங்குகிறது.



இத்திட்டத்தின்படி பல்வேறு காரணங்களால் எதிர்பாராமல் மரணமடையும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.50,000/- மும், விபத்தினால் நிரந்தர உடல் ஊனமுற்றோருக்கு தலா ரூ.25,000/-மும், வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது. மேலும் உறுப்பினர்கள் மரணமடையும் போது அவர்களின் ஈமச் சடங்கிற்காக குழு நிதியிலிருந்து ரூ.5000/- உடனடியாக வழங்கப்படுகிறது.

**அதன்படி கடந்த 2025 ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்களிலிருந்து பல்வேறு காரணங்களால் மரணமடைந்த 1289 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.6.44 கோடி மற்றும் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ.62.75 இலட்சம் என மொத்தம் ரூ.7.06 கோடி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டது.**

இந்நிதி மறைந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களின திடீர் இழப்பால் துவண்டுபோகும் குடும்பங்களுக்கு ஆறுதலாக மட்டுமல்லாது, அவர்களின் தினசரி வாழ்க்கையை முன்னெடுத்து செல்லும் வலிமையையும் அளிக்கின்றது.

**ஐ.வி.டி.பி நிறுவனம் இத்திட்டம் துவங்கப்பட்ட 2001 - 2025 ஆம் ஆண்டு வரை மறைந்த 14,728 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ₹ 75.49 கோடியை வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.**



ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களின் 2025 ஆம் ஆண்டிற்கான

# இலாபப் பங்கீடு

## ₹ 93.44 கோடி

ஐ.வி.டி.பி நிறுவனம், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகித்து வருகின்றது. ஒவ்வொரு குழுவிலும் உறுப்பினர்கள் தங்களால் முடிந்த அளவில் மாதாந்திரமாக ஒரு குறிப்பிட்ட தொகையை சேமித்து வருகின்றனர். இந்த சேமிப்புத் தொகை, குழு உறுப்பினர்களுக்கே அவசர தேவைகள் மற்றும் சிறு தொழில்கள் தொடங்குவதற்கான கடன்களாக வழங்கப்படுகிறது.

குழு உறுப்பினர்கள் பெறும் கடன்களுக்கு குறைந்த வட்டி விதிக்கப்படுகிறது. அந்த கடனிற்கு பெற்ற வட்டியானது குறிப்பிட்ட கால இடைவெளியில் குழு உறுப்பினர்களுக்கு இலாபமாகப் பங்கிடப்படுகிறது. அங்ஙனம் **கடந்த 2025 ஆம் ஆண்டில் 6214 குழுக்களிலுள்ள 106689 உறுப்பினர்கள் இலாபப் பங்கீடாக ரூ. 93.44 கோடியைப் பெற்று பயனடைந்துள்ளனர்.**

| | | |
|---|---|---|
| மொத்த குழுக்கள் | 6214 | |
| உபரி சேமிப்பு | 142.24 | கோடி |
| இலாபப் பங்கீடு | 93.44 | கோடி |
| மொத்தம் | 235.68 | கோடி |

**இதுவரை ஐ.வி.டி.பி உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு**

## ₹ 1098.85 கோடி



# விதவை உறுப்பினர்களின் 365 குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

**₹ 46.87 இலட்சம்**

ஐ.வி.டி.பி. நிறுவனம், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களின் நலனை முன்னிட்டு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில் கணவரை இழந்த விதவை உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்வியை ஆதரிக்கும் பொருட்டு கல்வி உதவித்தொகையை வழங்கி வருகிறது.

அதன்படி இவ்வருடம் **365 மாணவ மாணவியருக்கு ரூ.46.87 இலட்சம்** மதிப்பில் கல்வி உதவித்தொகையை வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

**ஐ.வி.டி.பி சுய உதவி குழு உறுப்பினர்களின் குழந்தைகளின் அனைத்து விதமான படிப்பிற்கும் தலா ரூ.12,500/- மற்றும் மருத்துவப் படிப்பு பயிலும் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/- என கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.**

**இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை மொத்தம் ரூ. 3.72 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**




## ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கு

# புத்தாண்டு பரிசு

## ₹ 4.31 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனத்தில் ஒவ்வொரு வருடமும் ஆண்டின் முதல் நாள் பணியாளர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில், 2026 ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நிறுவனம் சிறப்பான விழாவை ஏற்பாடு செய்தது. **இவ்விழாவில் பணியாளர்களுக்கான சிறப்பு புத்தாண்டு பரிசுகளாக கேக்குகள் மற்றும் அறுசுவை உணவு என ரூ.4.31 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.**



# அன்பும் பகிர்வும்

இணைந்த

## ஐ.வி.டி.பி யின் சிறப்பு பொங்கல் பரிசு

## ₹ 19.64 இலட்சம்




தமிழர் திருநாளான பொங்கலை முன்னிட்டு, சமூக அக்கறையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்தும் வகையில் நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தின் சார்பில் பல்வேறு பள்ளி ஆசிரியர்கள், பாஞ்சாலியூர் திருநங்கைகள் மற்றும் ஐ.வி.டி.பி பணியாளர்கள் போன்ற **1154 பயனாளர்களுக்கு ரூ. 19.64 இலட்சம்** மதிப்பிலான அத்தியாவசியப் பொருட்கள், உணவுத் தொகுப்புகள், பரிசுகள் மற்றும் பண உதவிகளைப் பொங்கல் பரிசாக வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

ஆர்.சி பாத்திமா ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி
**21 ஆசிரியர்களுக்கு உணவுத் தொகுப்புகள் ₹ 24,024**

தொன் போஸ்கோ பள்ளி, கிருஷ்ணகிரி
**30 ஆசிரியர்களுக்கு உணவுத் தொகுப்புகள் ₹ 34,320**

புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி
**32 ஆசிரியர்களுக்கு உணவுத் தொகுப்புகள் ₹ 36,608**

பஞ்சாலியூர் பகுதியைச் சேர்ந்த திருநங்கைகள்
**80 பேருக்கு சேலைகள் ₹ 45,800**

பஞ்சாலியூர் பகுதியைச் சேர்ந்த திருநங்கைகள் **80 பேருக்கு 25 கிலோ அரிசி (ம) அத்தியாவசியப் பொருட்கள் ₹ 1,14,800**

ஐ.வி.டி.பி பணியாளர்களில் 5 வருடம் நிறைவடைந்த
**176 பணியாளர்களுக்கு குக்கர்கள் ₹ 3,37,980**

ஐ.வி.டி.பி பணியாளர்களில் 2 வருடம் நிறைவடைந்த
**282 பணியாளர்களுக்கு ஊக்கத் தொகைகள் ₹ 8,46,000**

ஐ.வி.டி.பி. யின் 453 பணியாளர்களுக்கு
**உணவுத் தொகுப்புகள் ₹ 5,24,971**

# ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு

## உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகளுக்கான

# கணினிப் பயிற்சி

₹ 1.16 இலட்சம்



ஐ.வி.டி.பி நிறுவனம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் கணினி பயிற்சி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம், அவர்களின் திறன்களை வளர்த்துக் கொண்டு, வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவும் ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும்.

இந்த பயிற்சி மூலம், பெண்கள் மற்றும் மாணவிகள் டிஜிட்டல் உலகின் அடிப்படை தொழில்நுட்ப அறிவுகளை கற்றுக்கொண்டு, தங்களின் திறமைகளை மேம்படுத்திக் கொண்டு, அதன் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இக்கணினிப் பயிற்சியில் இதுவரை 3 கட்ட பயிற்சிகளில் 94 உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகள் பங்கேற்று வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்துள்ள நிலையில் தற்பொது 4ஆம் கட்ட பயிற்சியில் 35 பேர் பயிற்சிப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

**இப்பயிற்சி வகுப்பிற்காக அக்டோபர் முதல் மார்ச் 2026 வரை ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை ரூ. 1.16 இலட்சம்.**

**இதுவரை இப்பயிற்சி வகுப்புகளுக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை ரூ.20.09 இலட்சம்.**

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# தையற்பயிற்சி மற்றும் ஆரி வேலைபாடு சிறப்பு பயிற்சி வகுப்புகள்

₹ 3.02 இலட்சம்



ஐ.வி.டி.பி நிறுவனம், சுய உதவி குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு பயிற்சி திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்த பயிற்சிகள் மூலம் பெண்கள் தங்கள் திறன்களை வளர்த்துக் கொண்டு, சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கி, குடும்பத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்துகின்றனர்.

அவ்வகையில் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் இதுவரை நடைபெற்ற 26 கட்ட பயிற்சிகளில் மொத்தம் 716 பேர் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர். தற்போது நடைபெற்று வரும் 27 ஆம் கட்ட அடிப்படை பயிற்சியில் 25 பேர் பயின்று வருகின்றனர்.

மேலும், ஆரி வேலைப்பாடு சிறப்பு தையல் பயிற்சியில் நடைபெற்ற 19 கட்டங்களில் 362 பேர் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். தற்போது 20 ஆம் கட்டத்தில் 18 பேர் இந்த சிறப்பு பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

**இப்பயிற்சி வகுப்பிற்காக அக்டோபர் முதல் மார்ச் 2026 வரை ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை ரூ. 3.02 இலட்சம்.**

**இதுவரை இப்பயிற்சி வகுப்புகளுக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை ரூ. 12.62 இலட்சம்.**

ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான

# ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் முகாம்

மற்றும்

# இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சைத் திட்டம்

உயிர்க்கொல்லி நோயான புற்றுநோய் ஒரு குடும்பத்தையே புரட்டிப் போடக் கூடியது. அந்நோய் வந்தால் குடும்ப பொருளாதாரத்திற்கும் உயிர்க்கும் உத்திரவாதம் இல்லை என்பது நாம் அறிந்ததே. அதனால் விழிப்புணர்வுடன் அக்கொடிய நோயிலிருந்து நம்மை காப்பாற்றி கொள்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.




1. ஐ.வி.டி.பி. உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவசப் புற்றுநோய் மருத்துவச் சிகிச்சை திட்டமானது நாட்டின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
2. புற்றுநோய் இல்லா மகளிர் வாழ்வு மலர ஐ.வி.டி.பி. நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட திட்டமே ஐ.வி.டி.பி. உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவசப் புற்றுநோய் மருத்துவச் சிகிச்சை திட்டமாகும்.
3. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஐ.வி.டி.பி. உறுப்பினர்களுக்கு புற்றுநோய் அறிகுறிகள் இருப்பதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதற்குரிய சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் அளித்து உறுப்பினரை புற்றுநோயிலிருந்து காப்பாற்றுவதே ஆகும்.
4. இத்திட்டம் துவங்கப்பட்டு 4 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில், எந்த பிரச்சனையும் இல்லாமல், முகாமில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு கூட, புற்றுநோய் கண்டறியப்பட்டு இலவச சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே உறுப்பினர்கள் காலம் தாழ்த்தாமல், பணியாளர்கள் கட்டாயத்தின் கீழ், முகாமில் கலந்து கொள்வதைத் தவிர்த்து, தாங்களே கலந்துக் கொள்ளாதவர்களைக் கண்டறிந்து, ஆலோசனைக் கூறி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். நோய் முற்றிய நிலையில் கலந்துக் கொள்வதைத் தவிர்க்கவும்.
5. புற்றுநோய் தொடர்பான பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் குறித்து உறுப்பினர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் உடனடியாக ஐ.வி.டி.பி. நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## பரிசோதனைக்கு வருபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை



1. உறுப்பினர் குழுவில் சேர்ந்து 3 வருடம் நிறைவடைந்திருக்க வேண்டும்.
2. பரிசோதனைக்கு வரும் போது ஆதார் அட்டை மற்றும் குழுவின் தனிநபர் சேமிப்பு புத்தகம் கொண்டு வருவது அவசியம்.
3. பரிசோதனைக்கு வரும்போது சேலை அணிந்து வரவும்.
4. பரிசோதனை முகாமில் கலந்து கொள்பவர்கள் 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பது அவசியம்.
5. ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறியும் முகாம் அனைத்து வேலை நாட்களிலும் கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனையில் நடைபெற்று வருகிறது.
6. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாக அனைவரும் பரிசோதனை முகாமில் கலந்துக் கொண்டு தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளவும்.

# IVDP யின் புதிய மருத்துவத் திட்டம்

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் திருமணம் ஆகாத பெண் குழந்தைகளுக்கு மார்பகத்தில் ஏதேனும் கட்டிகள் அல்லது வேறு பிற அறிகுறிகள் காணப்படும் போது ஐ.வி.டி.பி நிறுவனத்தை அணுகினால் அவர்களுக்கு நோயின் தன்மைக்கேற்ப இலவச சிகிச்சை வழங்கப்படும். ஐ.வி.டி.பி உறுப்பினர்களில் 50 வயதிற்கு குறைவாக உள்ள உறுப்பினர்களுக்கு உதடு பிளவு, விபத்து மற்றும் பிறகாரணங்களால் முகத்தில் ஏதாவது குறைபாடு இருப்பின் ஐ.வி.டி.பி நிறுவனம் மூலம் இலவச முகச் சீரமைப்பு சிகிச்சை அளிக்கப்படும்.

### ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினருக்கு

**₹ 37 ஆயிரம்**

## கண் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை

சமூக நலப்பணிகளில் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் ஐ.வி.டி.பி நிறுவனம், தன்னுடைய சுய உதவி குழு உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், அவர்களின் ஆரோக்கிய பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தருமபுரி கிளை, முத்து மாரியம்மன் குழு உறுப்பினரான **அம்சா** என்பவருக்கு கண் இமை குறுகி இருந்ததன் காரணமாக தினசரி வாழ்க்கையில் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில், மருத்துவர்களின் ஆலோசனையின்படி, அவருக்கு கண் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, தற்பொது நலமாக உள்ளார். **சிகிச்சைக்கான செலவு மொத்தம் ரூ. 37,440**



அறுவை சிகிச்சைக்கு முன்



அறுவை சிகிச்சைக்கு பின்

**குறிப்பு : புற்றுநோய் சிகிச்சைப் பெறும் உறுப்பினரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவதால் இனிவரும் காலங்களில் அறுவைச் சிகிச்சைக்கு தேவையான இரத்ததானத்தை உறுப்பினரின் நெருங்கிய உறவினர்கள் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.**

# மருத்துவ உயர் சிகிச்சையில் கலந்து கொள்பவர்களின் கவனத்திற்கு

- புற்றுநோய் மருத்துவ உயர் சிகிச்சை பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் வழங்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, மருந்து மற்றும் ஆய்வகச் செலவுகள் அனைத்தும் ஐ.வி.டி.பி நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது.
- சிகிச்சையின் போது நோயாளிக்கும் உடன் தங்குவோர்க்கும் மருத்துவமனையிலேயே, இலவச உணவு வழங்குவதற்கு ஐ.வி.டி.பி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.
- சிகிச்சைப் பெறும் உறுப்பினர் குழுவிற்கு தொடர்ந்து கலந்து கொள்பவராக இருக்க வேண்டும்.
- சிகிச்சைக்கு வரும் போதும், சிகிச்சை முடிந்த பின்னரும் குழுவில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
- சிகிச்சை பெறவிருக்கும் உறுப்பினருக்கு குழுவில் எவ்வித Overdue or late payment இருக்கக் கூடாது.
- உறுப்பினர்களிடம் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை புற்றுநோய் காணப்பட்டால் சிகிச்சை அளிப்பது எளிது. நோயும் விரைவில் குணமடையும். உறுப்பினரால் சிகிச்சையைத் தாங்கிக் கொள்ள உடலில் சக்தி இருக்கும்.



- அதே சமயம் சிகிச்சையை இடையிலேயே நிறுத்தினால் தொடர்ந்து ஐ.வி.டி.பி நிறுவனத்தால் சிகிச்சைக்கு உதவ இயலாது.
- ஒவ்வொரு முறை பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு செல்லும் போதும், ஐ.வி.டி.பி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அனுமதி கடிதம் பெற்றுச் செல்வது அவசியம்.

# ROBOTIC - அறுவைச் சிகிச்சையின் நன்மைகள்



**அதிக துல்லியம் :** ரோபோடிக் தொழில்நுட்பம் சிறிய இடங்களிலும் மிகவும் துல்லியமாக செயல்பட உதவுகிறது.

**சிறிய கீறல்கள் :** சிறிய துளைகள் வழியாக சிகிச்சை செய்வதால் வலி குறைவாகும், ரத்த இழப்பு குறையும்.

**விரைவான மீட்பு :** சிக்கல்கள் குறைவு என்பதால் நோயாளிகள் விரைவாக குணமடைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியும்.

**குறைந்த மருத்துவமனை தங்கல் :** சிகிச்சைக்கு பின் குறைந்த நாட்களில் மருத்துவமனையில் இருந்து வெளியேறலாம்.

**சிறந்த முடிவுகள் :** மேம்பட்ட தொழில்நுட்பம் சிறந்த அறுவை முடிவுகளையும் தருகிறது.

**சாதரண அறுவை சிகிச்சையை காட்டிலும் இந்த ரோபோடிக் அறுவை சிகிச்சைக்கு ஆகும் செலவு அதிகம்.**

ஜனவரி 2023 முதல் மார்ச் 2026 வரை

# பரிசோதனை முகாமில் பங்கேற்று

## அனைத்து நிலைகளிலும் சிகிச்சைப் பெற்றவர்களின் விவரம்

| | |
|---|---|
| ஆரம்பநிலை புற்றுநோய் பரிசோதனை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 36978 |
| HPV Positive கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை | 2385 |
| Colposcopy சிகிச்சை மேற்கொண்டோர் | 1337 |
| Hystectomy (கர்ப்பப்பை அகற்றுதல்) சிகிச்சைப் பெற்றோர் | 127 |
| Thermalablation, Cone Biopsy சிகிச்சைப் பெற்றவர்கள் | 308 |
| மார்பகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் | 27564 |
| மார்பக Mammogram, FNAC பரிசோதனை மேற்கொண்டோர் | 631 |
| மார்பகப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டோர் | 77 |
| கதிரியக்க மற்றும் கீமோ தெரபி சிகிச்சைப் பெற்றோர் | 78 |
| Pet Scan எடுத்தவர்கள் | 89 |
| Genetic Test மேற்கொண்டோர் | 10 |
| Abdomen மற்றும் Breast Scan எடுத்தவர்கள் | 2132 |
| புற்றுநோய் அல்லாத பொது சிகிச்சைப் பெற்றோர் | 60 |
| தைராய்டு கட்டி நீக்கும் சிகிச்சைப் பெற்றோர் | 26 |
| ரோபோட்டிக் அறுவைச் சிகிச்சைப் பெற்ற உறுப்பினர்கள் | 35 |
| ரோபோட்டிக் அறுவைச் சிகிச்சைப் பெற்ற உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் | 3 |
| உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் சிகிச்சைப் பெற்றோர் எண்ணிக்கை | 39 |
| கருப்பை மற்றும் மார்பக சிகிச்சைப் பெற்ற உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் | 36 |

| விவரம் | 2023 – மார்ச் 2025 வரை | ஏப்ரல் 2025 – மார்ச் 2026 வரை | மொத்தம் | |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை | ₹ 3.18 கோடி | ₹ 1.78 கோடி | ₹ 4.96 கோடி | ₹ 12.57 கோடி |
| புற்றுநோய் உயர் சிகிச்சை | ₹ 4.28 கோடி | ₹ 3.33 கோடி | ₹ 7.61 கோடி | |

ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்

# முக்கிய கவனத்திற்கு

ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு ஊக்குநர்கள் அனைவரும் தனித்திறன் வாய்ந்தவர்களாக செயல்படுவதில் வல்லவர்கள். ஆகவே தங்களது குழுவைத் தாங்களே எவ்வாறு திறம்பட வழிநடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இவ்வாண்டு தீர்மானப்புத்தகம், ஊக்குநர் கையேடு ஆகியவை வடிவமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஐ.பி.டி.பி. நிறுவனத்தால் வழங்கப்படும் நோட்டீஸ், தீர்மானப்புத்தகம், ஊக்குநர் கையேடு போன்ற ஆவணங்களை ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு மற்றும் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த ஆவணங்களை மற்ற வெளியாட்கள் பயன்படுத்த அனுமதிப்பது சட்டப்படி குற்றமாகும். இந்த செயற்பாட்டைத் தவிர்க்கவும்.

## 2026-2027 ஆம் ஆண்டு தீர்மானப் புத்தகத்தில் உள்ளடங்கியுள்ள புதிய சாராம்சங்கள்

1. **தணிக்கை முடிவுகளின் அடிப்படையில் குழு மற்றும் ஊக்குநருக்கான தரநிலைகள் (Grading)** ஊக்குநரின் பொறுப்புகள் மற்றும் சிறந்த குழுக்களாக செயல்படுவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியதாகும். அதை உணர்ந்து ஊக்குநர்கள் அனைத்து பணிகளையும் உடனுக்குடன் முடிக்க அறிவுறுத்தப்படுகிறது.
2. **குழுக்களின் தனிநபர் சேமிப்பு மற்றும் கடன்களை உறுதிப்படுத்துவதற்கான தனிப்பக்கங்கள்.**
3. **உள்தணிக்கை பக்கங்கள்** உள்தணிக்கை பக்கங்களில் ஒவ்வொரு 3 மாத வரவு, செலவுகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் பெற்றுக் கொண்டதற்கான படிவங்களை சரியாக பூர்த்தி செய்வதன் மூலம் குழுக்களில் ஏற்படும் குழப்பங்களை உடனுக்குடன் சரிசெய்யலாம்
4. **Acquitance Verification:** Acquitance பக்கங்களில் ஒவ்வொரு பணப் பரிவர்த்தனைகளின் போதும், சுகாதாரப் பொருட்கள் பெற்றுக் கொள்ளும் போதும் கையொப்பமிட்டு கைரேகை பதிவு செய்தல் அவசியம் பொருள் பெற்றுக் கொண்டதற்கான படிவங்களை சரியாக பூர்த்திசெய்வதன் மூலம் குழுக்களில் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கலாம்.
5. **Bank loan closing தீர்மானம் :** தீர்மான புத்தகத்தில் வங்கிக் கடன் closingற்கென ஒதுக்கப்பட்ட பக்கத்தின் தீர்மானம் மற்றும் வழிமுறையினைப் பின்பற்றும் போது, உறுப்பினர்களிடம் தேவையின்றி அதிகமாக வசூலிக்கும் கழநிலையைத் தவிர்க்கலாம்.
6. **Bank loan Appraisal** தீர்மானம் இப்பக்கத்தில் ஊக்குநர் உட்பட குழுவை சேர்ந்த யாரும் எழுதக் கூடாது. Appraisal வருபவர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
7. **IVDP Loan மீதங்கள் சரிபார்க்கும் வழிமுறைகள்** இப்பக்கத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஐவிடிபி கடன் குறித்த விவரங்களை ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் நேரடியாக தலைமை அலுவலகத்தைத் தொடர்புக் கொண்டு அறிந்துக் கொள்ளலாம். (04343-232129, 236420)
8. **வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி பங்களிப்பு நிதியை மாற்றம் செய்வதற்கான தீர்மானம்** இப்பக்கத்தில் உள்ள தீர்மானத்தை முறையாக பயன்படுத்தினால் பழைய உறுப்பினர் மற்றும் புதிய உறுப்பினரின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு சரியான பாதுகாப்பு நிதித்தொகையை ஐ.வி.டி.பியின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கணக்கிற்கு மாற்றம் செய்ய முடியும்.
9. **பயிற்சிக்கென ஒதுக்கப்பட்டபகுதி:** இப்பக்கத்தில் பயிற்சியின் போது கொடுக்கப்படும் தகவல்கள் மற்றும் Pre Appraisal குறித்த தகவல்களைப்பதிவு செய்ய வேண்டும்.

## TAB பயன்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் வெளியூரில் உள்ள உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதன் முக்கியத்துவம்.

- குழு உறுப்பினர்கள் குழுவாய் அமர்ந்து குழுக் கூட்டம் நடத்துவது மற்றும் ஒரு உறுப்பினர் வருடத்தில் 6 குழுக் கூட்டங்களிலாவது தனது வருகையைக் கைரேகை மூலம் உறுதிப்படுத்துதல் அவசியம்
- குழுவின் கடன் மீதங்கள். நிறுவனத்தின் நலத் திட்டங்கள், வங்கிக்கடன் closing போன்ற அனைத்து செயல்பாடுகளையும் உறுப்பினர்கள் அறிந்து கொண்டதை உறுதிப்படுத்தவே TAB-ல் கைரேகை வைக்கும் வழிமுறை பின்பற்றப்படுகிறது.

## ஊக்குநர் கையேடு உருவாக்கப்பட்டதின் நோக்கமும் பயன்பாடும்

- ✤ ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள் ஐ.வி.டி.பி பணியாளர்களைச் சார்ந்து செயல்படாமல் தாங்களாகவே வழி நடத்திச் செல்ல உருவாக்கப்பட்ட வழித்துணையே ஊக்குநர் கையேடு,
- ✤ குழுவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளுக்கும் மாதிரி தீர்மானப் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி குழுவில் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்ளவும்.
- ✤ ஊக்குநர் கையேடு இல்லாதவர்கள் உடனடியாக தலைமை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

## இறந்த உறுப்பினர் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யும் வழிமுறைகள்

- குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் மரணமடைந்தால் உடனடியாக குழுவைச் சேர்ந்த ஊக்குநர்கள் (அ) உறுப்பினர்கள் தங்களது கிளை அலுவலகத்திற்கும். அதைத் தொடர்ந்து தலைமை அலுவலகத்திற்கும் தகவல் கொடுக்க வேண்டும். தலைமை அலுவலக தொலைப்பேசி எண்கள் : 04343-236420,04343-232129.
- கிளை அலுவலகப் பணியாளர்கள் மற்றும் CLF பிரதிநிகள் ஈமச்சடங்கில் கலந்து கொள்வார்கள்.

## பெற்றுக்கொண்ட சுகாதாரப் பொருட்களின் கடனுக்கான WITHDRAWAL ஒப்படைப்பதில் ஊக்குநருக்கானப் பொறுப்புகள்

- குழு தீர்மானம் மற்றும் ஊக்குநர், பிரதிநிதியின் கையொப்பமின்றி எந்த வித பணப்பரிவர்த்தனைகளும் குழுவில் நடைபெறாது என்பதையும், குழுவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் 20 உறுப்பினர்களுக்கும் சொந்தமானவை என்பதையும் ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ஐ.வி.டி.பி. கிளை அலுவலகங்களில் குழுக்கூட்டம் தொடர்பாகவும். சுகாதாரப் பொருட்கள் DD எடுப்பது தொடர்பாகவும் Withdrawal வழங்கும் போது மாதிரி படிவத்தில் உள்ளவாறு எந்த பொருளுக்காக Withdraw கொடுக்கப்பட்டது என்ற விவரத்தையும், எத்தனை பொருட்கள் மற்றும் எவ்வளவு தொகை என்பதையும் எழுதி கொடுப்பது ஊக்குநரின் முழு பொறுப்பாகும்.


TAMIL NADU GRAMA BANK
Napkin
CASH WITHDRAWAL SLIP
(USABLE AT BASE BRANCH ONLY)
This Form is not a Cheque
Pass Book must accompany this form
Branch
Date 20
Pay to self / us the sum of
₹ 1,890
to the debit of my / our Bank A/c No.
1001970890 6
Signature of A/c Holder
Name(s) of A/c Holder(s)
Phone No. of A/c Holder
For Office Use
Trans. ID
Pay to Shri/Smt./Ms.
₹
Passing officer / SWO
SWO / Paying Official

## ஐ.வி.டி.பி நிறுவனத்தில் குழுக்களை வழிநடத்துவதில் புதிதாக செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறைகள்

- புதிய குழுக்களின் கணக்கு துவங்குவதற்கு முன்பு ஊக்குநர் மற்றும் பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்ட நபர்கள் ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகம் வர வேண்டும்.
- புதிய குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு வருவதன் மூலம் நிறுவனத்தின் நோக்கம், குறிக்கோள், குழுவை வழிநடத்தும் முறை, கொடுக்கப்படும் பயிற்சிகள். ஊக்குநர் மற்றும் பிரதிநிதியின் பொறுப்புகள் போன்ற தகவல்களை தெளிவாக அறிந்துக்கொள்ள முடியும்.

### உறுப்பினர் விலகல் மற்றும் குழு விலகுதல் பற்றிய தகவல்கள்

- ☛ குழுவோ அல்லது உறுப்பினரோ தங்கள் குழவிலிருந்து விலகும்போது அவர்களின் சேமிப்பு (அ) அவருக்கு சேர வேண்டிய தொகை அவரது **தனிநபர் சேமிப்பு கணக்கிற்கு** மட்டுமே மாற்றம் செய்யப்படும்

### விலகிய குழு உறுப்பார்கள் மீண்டும் வேறு குழக்களில் இணைய வாய்ப்பு

- ☛ சூழ்நிலை காரணமாக விலகும் உறுப்பினர்கள் அருகிலுள்ள ஐ.வி.டி.பி. குழுவிலோ (அ) அவர்கள் நிரந்தரமாக குடியிருக்கும் கிராமத்திலுள்ள வேறு ஐ.வி.டி.பி கிளையில் உள்ள குழுக்களிலோ. அந்த குழக்களின் முழு சம்மதத்துடனும். தீர்மானத்துடனும் ஏற்கனவே குழுவில் இருந்து வருடங்களைக் கணக்கில் கொண்டு தற்போது உள்ள அதே சேமிப்புடன். அனைத்து வகையான கடன்களைப் பெறவும் தேவையான வழிமுறைகள் செய்து தரப்படும்.

## களப்பணியாளர்கள் குழுவில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்த TRACKING SYSTEM அறிமுகம்




- ✤ ஐ.வி.டி.பி நிறுவனமானது குழுக்களைத் திறம்பட செயல்படுத்துவதில் உள்ள பணியாளர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவர்கள் குழுவில் கலந்து கொள்வதையும் நிறுவனத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதையும் கண்காணிக்கும் பொருட்டு Tracking System அறிமுகப்படுத்தவுள்ளது.
- ✤ அந்தந்த குழுக்களின் தீர்மானப் புத்தகத்தில் முன்பக்கம் பதிவு செய்யப்பட்டுள்ள குழுக் கூட்ட நேரம். களப்பணியாளர் கூட்டத்திற்கு வருகை புரியும் நேரத்தோடு ஒத்திருக்க வேண்டும்.
- ✤ இந்த Tracking System முறை பணியாளர்களின் ஊதியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் குழுவை நடத்த ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள் களப்பணியாளரோடு இணைந்து முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறோம்.

### ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்

# கனிவான கவனத்திற்கு

**ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்கள்**
**நடைபெறாத விவரங்கள் குறித்து பதிவு செய்தல்**

ஒரு குழு நடைபெறவில்லையெனில், அந்த குழுவின் பெயர் மற்றும் அக்குழுவிற்கு தொடர்புடைய அனைத்து விவரங்களையும் அன்றோ அல்லது மறுநாளோ ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி (04343-232129, 236420) மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

நடைபெறாத குழுவின் விவரத்தை உடனடியாக நிறுவனத்திற்கு தெரியப்படுத்துவது ஊக்குநர் மற்றும் தொகுதி அளவு கூட்டமைப்பு பணியாளர்களின் முக்கிய பொறுப்பாகும்.

தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்த பின், ஒரு மாத காலத்திற்குள் ஊக்குநர் குழுவின் தீர்மான புத்தகம் மற்றும் வங்கி பாஸ் புத்தகத்துடன் ஐ.வி.டி.பி நிறுவனரை தலைமை அலுவலகத்தில் நேரடியாக சந்திக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் வழங்கப்படும் தகவல்கள் (நடைபெறாத குழுக்களின் விவரங்கள்) தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, ஐ.வி.டி.பி நிறுவனரால் பரிசீலிக்கப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

சரியான நேரத்தில் பதிவு செய்யப்படாத குழுக்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தாமதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின்

# சிறப்பு கவனத்திற்கு

## நலத்திட்டங்கள்



ஐ.வி.டி.பி நிறுவனம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் ஐ.வி.டி.பி.–யின் உறுப்பினர்களுக்காக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களான **கோசலை விருது.** விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு **கல்வி உதவித்தொகை, குடிசை தீ விபத்து நிதியுதவி,** சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான **புற்றுநோய் உயர் சிகிச்சை** போன்ற திட்டங்களுக்கு எந்த வகையிலும் கட்டணம் பெறுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான புற்றுநோய் உயர் சிகிச்சை முற்றிலுமாக ஐ.வி.டி.பி யின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது என்பதை நினைவூட்டுகிறோம்.**

## சிறப்பு திட்டங்கள்



ஐ.வி.டி.பி யின் சிறப்பு திட்டங்களான **வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி, இலாபப் பங்கீடு** கணக்கிடுதல் போன்றவையும் ஐ.வி.டி.பி யின் சட்டத்திட்டங்களின் படியே வழங்கப்படுகிறது.



இந்த நலத்திட்டங்களில் பயன்பெறும் உறுப்பினர்களிடம், ஐ.வி.டி.பி நிறுவனம் இதுவரை, நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ சேவை கட்டணமாக எந்த வித கட்டணமும், ஐ.வி.டி.பி யின் பணியாளர்கள் மூலமாகவோ மற்றும் ஊக்குநர் மூலமாகவோ வசூலிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆகவே இத்திட்டங்களில் நீங்கள் பயன்பெறும் பொழுது, யாரேனும் சேவை கட்டணம் என்று சொல்லி பணம் வசூலிக்கும் பட்சத்தில், உடனடியாக ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். செல் : 04343–232129, 236420**



# பெற்றோர்களை இழந்த *மற்றும்* வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும்

## 1912 கல்லூரி மாணவ மாணவியருக்கு ஐ.வி.டி.பி. *யின்* உயர்கல்வி உதவித்தொகை

# ₹ 1.60 கோடி

ஐ.வி.டி.பி நிறுவனம், சமூக நலனில் முக்கிய பங்காற்றி வரும் நிலையில், கல்வித் துறையில் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, பெற்றோரை இழந்த மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்கல்வித் தொடரும் வகையில் கல்வி உதவித்தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் மூலம் பல மாணவர்கள் தங்கள் கல்வியைத் தடையின்றி தொடரும் வாய்ப்பைப் பெற்று, எதிர்காலத்தில் நல்ல நிலையை அடைய உதவியாக உள்ளது. **அதன்படி பல கல்லூரிகளைச் சார்ந்த 1912 மாணவர்களுக்கு ரூ. 1.60 கோடி கல்வி உதவித் தொகையை வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர்.**

| வ. எண் | கல்லூரியின் பெயர் | பெற்றோரை இழந்த மாணவர்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மாணவர்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பத்தூர், தூய நெஞ்சக் கல்லூரி | 146 | 162 | ₹ 22.57 இலட்சம் |
| 2 | நாமக்கல், பான் செக்கர்ஸ் கல்லூரி | 39 | 76 | ₹ 10.27 இலட்சம் |
| 3 | சேலம், தூய மரியன்னை நர்சிங் கல்லூரி | - | 13 | ₹ 1.30 இலட்சம் |
| 4 | வேலூர், அக்சீலியம் கல்லூரி | 104 | 7 | ₹ 9.45 இலட்சம் |
| 5 | கள்ளக்குறிச்சி, இமாகுலேட் கல்லூரி | 38 | 41 | ₹ 7.42 இலட்சம் |
| 6 | திருப்பூர், செயின்ட் ஜோசப் கல்லூரி | 34 | 114 | ₹ 11.17 இலட்சம் |
| 7 | சேலம்,பாகல்பட்டி, செயின்ட் ஜோசப் கல்லூரி | 10 | 82 | ₹ 7.19 இலட்சம் |
| 8 | புதுப்பாளையம், இதயா கல்லூரி | 21 | 77 | ₹ 9.15 இலட்சம் |
| 9 | தருமபுரி, தொன் போஸ்கோ கல்லூரி | 40 | 58 | ₹ 7.47 இலட்சம் |
| 10 | தருமபுரி, தொன் போஸ்கோ கல்வியியல் கல்லூரி | - | 11 | ₹ 1.10 இலட்சம் |
| 11 | வேட்டவலம், இலயோலா கல்லூரி | 27 | 150 | ₹ 13.30 இலட்சம் |
| 12 | எலத்தகிரி, கொன்சாகா கல்லூரி | 30 | 67 | ₹ 8.35 இலட்சம் |
| 13 | மெட்டாலா, இலயோலா கல்லூரி | 30 | 47 | ₹ 7.14 இலட்சம் |
| 14 | ஏலகிரி,தொன் போஸ்கோ கல்லூரி | 40 | 108 | ₹ 11.50 இலட்சம் |
| 15 | ஒசூர்,செயின்ட் ஜோசப் கல்லூரி | 66 | 118 | ₹ 11.42 இலட்சம் |
| 16 | சேலம், ஜெயராணி கல்லூரி | - | 84 | ₹ 6.30 இலட்சம் |
| 17 | சென்னை, தொன் போஸ்கோ கல்லூரி | - | 50 | ₹ 10 இலட்சம் |
| 18 | பிற கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்கள் | - | 22 | ₹ 4.85 இலட்சம் |
| | **மொத்தம்** | **625** | **1287** | **₹ 1.60 கோடி** |

**இதுவரை ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய மொத்த உயர்கல்வி உதவித்தொகை**

**₹ 10.36 கோடி**

## கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு

*ஐ.வி.டி.பி. வழங்கிய*

# கல்விப் பணிகள்

**₹ 20.68 இலட்சம்**

கோட்டையூரில் இயங்கி வரும் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியானது ஐ.வி.டி.பி நிறுவனரால் துவங்கப்பட்டது. இப்பள்ளியின் மேம்பாட்டிற்காகவும், பள்ளியில் பயிலும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காகவும் பல்வேறு கல்விப் பணிகளைச் செயலாற்றி வருகிறது ஐ.வி.டி.பி நிறுவனம். அவ்வகையில் **ரூ. 20.68 இலட்சம்** மதிப்பிலான கல்வி உதவிகளை வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.



| | |
|---|---|
| பள்ளியின் கணினி ஆய்வகத்திற்கு **16 CPU** | ₹ 5.42 இலட்சம் |
| ஒரு குடும்பத்தில் பயிலும் 2 மாணவர்களில் 1 மாணவருக்கான கட்டணமாக 151 மாணவர்களுக்கு **கல்வி உதவித்தொகை** | ₹ 13.26 இலட்சம் |
| முதல் வகுப்பு முதல் 7 ஆம் வகுப்பு வரை பயிலும் 280 மாணவர்களுக்கு **பாடப்புத்தகங்கள்** | ₹ 72 ஆயிரம் |
| குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 550 மாணவ மாணவியருக்கு **கேக்குகள்** | ₹ 27 ஆயிரம் |
| கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு 550 மாணவ மாணவியருக்கு **கேக்குகள்** | ₹ 27 ஆயிரம் |
| மாணவர்களின் நலன் கருதி 500 மாணவ மாணவியருக்கு **வாட்டர் பாட்டில்கள்** | ₹ 74 ஆயிரம் |



**இதுவரை ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளிக்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கிய மொத்த கல்விப் பணியின் மதிப்பு**

**₹ 7.01 கோடி**



"இருள் இல்லாமல், வெளிச்சத்தின் மதிப்பு எப்போதும் தெரியாது."




பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு

# ஊக்கப் பரிசுகள்

**₹ 29.86 இலட்சம்**

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திலும், அவர்களை நன்னெறிப்படுத்தவும் அயராது உழைக்கும் பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டும் வகையில் டேப் (TAB) கள், குக்கர்கள் மற்றும் ஊக்கத்தொகை போன்ற ஊக்கப்பரிசுகளை வழங்கி சிறப்பித்தது.

| | |
|---|---|
| எலத்தகிரி, கொன்சாகா கல்லூரியின் 10 வருடம் தொடர்ந்து பணியாற்றும் 10 ஆசிரியர்களுக்கு டேப் (TAB) கள் | ₹ 1.88 இலட்சம் |
| கிருஷ்ணகிரி ஆர்.சி. பாத்திமா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் 54 ஆசிரியர்களுக்கு குக்கர்கள் | ₹ 1 இலட்சம் |
| ஓசூர், செயின்ட் ஜோசப் கல்லூரியின் 138 ஆசிரியர்களுக்கு குக்கர்கள் | ₹ 2.56 இலட்சம் |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் 155 ஆசிரியர்கள் & 6 மாணவியர்களுக்கு ஊக்கத்தொகைகள் | ₹ 5.02 இலட்சம் |
| கிருஷ்ணகிரி, தொன் போஸ்கோ பள்ளியின் 30 ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகைகள் | ₹ 1.50 இலட்சம் |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் சுற்றுலா பயணத்திற்காக | ₹ 37,000 |
| கிருஷ்ணகிரி ஆர்.சி. பாத்திமா ஆண்கள் உயர்நிலைப் பள்ளியின் 21 ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகைகள் | ₹ 2.85 இலட்சம் |
| திருப்பூர், செயினட் ஜோசப் கல்லூரியின் 60 ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை & சீருடைகள் | ₹ 7.12 இலட்சம் |
| மெட்டாலா, இலயோலா கல்லூரியின் 43 ஆசிரியர்களுக்கு சேர்க்கை விகிதத்தை அதிகப்படுத்தியதற்காக ஊக்கத்தொகை | ₹ 3.78 இலட்சம் |
| கள்ளக்குறிச்சி, இம்மாகுலேட் மகளிர் கல்லூரியின் 46 ஆசிரியர்களுக்கு கற்பித்தல் திறனைப் பாராட்டி ஊக்கத்தொகை | ₹ 2.30 இலட்சம் |
| ஜான் பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி, அன்னியாளம் 50 ஆசிரியர்களுக்கு குக்கர் | ₹ 93,000 |
| கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி ஆசிரியர்களின் சுற்றுலா பயணத்திற்காக | ₹ 55,000 |

**இதுவரை பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் பணியைப் பாராட்டி ஐ.வி.டி.பி வழங்கிய மொத்தத் தொகை ₹ 1.44 கோடி**

# பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியருக்கு குளிர்கால உடைகள் (Jerkins)

# ₹ 5.46 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் உடல்நலனை முன்னிறுத்தி, குளிர்காலத்தில் மாணவர்கள் சௌகரியமாகவும் ஆரோக்கியமாகவும் கல்வியில் ஈடுபடும் நோக்கில், **971 மாணவ மாணவியருக்கு ரூ.5.56 இலட்சம்** மதிப்பிலான ஜெர்கின்களை **(Jerkins)** வழங்கி உதவியது.

அன்னியாளம்,
ஜான் பிரிட்டோ பள்ளியின்
477 மாணவ
மாணவியருக்கு
குளிர்கால உடைகள்

**₹ 2.62 இலட்சம்**





ஏலகிரி, தொன் போஸ்கோ
கல்லூரியின் 494 மாணவ
மாணவியருக்கு
குளிர்கால உடைகள்.

**₹ 2.84 இலட்சம்**



“அமைதியாக உழை; வெற்றியே உன் பெயரை உலகம் முழுவதும் ஒலிக்கட்டும்.”

கல்லூரிகளுக்கு

# 15 இன்ட்ராக்டிவ் போர்டுகள்

₹ 19.18 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், மாணவ மாணவியரின் கற்றல் அனுபவத்தில் இன்றையக் காலக்கட்டத்திற்கு ஏற்றவாறு புதியதான டிஜிட்டல் தொழில்நுட்ப முறைகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், மாணவர்களின் கல்வி திறனை மேம்படுத்தும் நோக்கிலும் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்ட்ராக்டிவ் போர்டுகளை வழங்கி வருகிறது. அவ்வகையில் பள்ளி மற்றும் கல்லூரி நிர்வாகத்தின் 50 சதவீகித பங்களிப்புடன் ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் 50 சதவீகித பங்களிப்பாக **ரூ. 19.18 இலட்சம்** மதிப்பிலான இன்ட்ராக்டிவ் போர்டுகளை வழங்கியது ஐ.வி.டி.பி. நிறுவனம்.



IVDP

இம்மாகுலேட் மகளிர் கல்லூரி
கள்ளக்குறிச்சி
2 இன்ட்ராக்டிவ் போர்டுகள்
₹ 1.65 இலட்சம்

தொன் போஸ்கோ கல்லூரி
சென்னை
6 இன்ட்ராக்டிவ் போர்டுகள்
₹ 5.87 இலட்சம்

இதயா கல்லூரி
புதுப்பாளையம்
7 இன்ட்ராக்டிவ் போர்டுகள்
₹ 7.12 இலட்சம்

தொன் போஸ்கோ கல்லூரி
தருமபுரி
4 இன்ட்ராக்டிவ் போர்டுகள்
₹ 4.13 இலட்சம்

அண்ணா அரசு உதவிப் பெறும்
பள்ளி, திண்டுக்கல்
1 இன்ட்ராக்டிவ் போர்டுகள்
₹ 41 ஆயிரம்

இதுவரை இன்ட்ராக்டிவ் போர்டுகள் வழங்கியதற்காக ஐ.வி.டி.பி செலவிட்ட மொத்தத் தொகை ₹ 71.97 இலட்சம்



## கள்ளக்குறிச்சி இம்மாகுலேட் கல்லூரிக்கு கல்வி உதவிகள்

**₹ 4.70 இலட்சம்**

கள்ளக்குறிச்சி, விரியூரில் செயல்பட்டு வரும் இம்மாகுலேட் மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவியரின் நலன் கருதி பல்வேறு கல்விப்பணிகளை செய்து வருகிறது ஐ.விடி.பி நிறுவனம். அவ்வகையில்,கல்லூரியில் மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் ஏற்றத் தாழ்வுகளின்றி, சமத்துவ மனப்பான்மையுடன் கல்லூரிக்கு வரும் பொருட்டு **590 சீருடைகள் - ரூ.3.29 இலட்சம்.** மாணவியரை ஊக்குவிக்கும் பொருட்டு ஏழ்மை நிலையில் வாழும் **165 மாணவிகளுக்கு தலா ரூ.860 மதிப்புள்ள வாட்ச்கள் ரூ. 1.41 இலட்சம்.**

## ஜவ்வாது மலை தொன் போஸ்கோ மலைவாழ் இல்லக் குழந்தைகளுக்கு இசைக் கருவிகள்

**₹ 57 ஆயிரம்**

ஐ.வி.டி.பி நிறுவனம்,
ஜவ்வாது மலை,
தொன் போஸ்கோ
இல்லத்தில் தங்கி பயிலும்
மலைவாழ் குழந்தைகளுக்கு
உதவிடும் வகையில்
**ரூ.57,230 மதிப்பிலான**
**6 இசைக் கருவிகளை**
வழங்கி உதவியது.



**இதுவரை இம்மேம்பாட்டு சங்கத்தின் குழந்தைகளுக்காக ஐ.வி.டி.பி செலவிட்ட தொகை ரூ. 9.22 இலட்சம்**



பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு ஊக்குநர்களுக்கு

# உணவு & கேக்குகள்

## ₹ 6.71 இலட்சம்

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் பள்ளி மாணவ மாணவியரை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் குழந்தைகள் தின விழா மற்றும் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு, இவ்வருடத்தில் **9525 மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு ரூ.6.71 இலட்சம் மதிப்பிலான உணவு மற்றும் கேக்குகளை வழங்கியது.**

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி, ஆர்.சி பாத்திமா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 1090 மாணவர்களுக்கு | ₹ 95,000 |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியின் 3510 மாணவிகளுக்கு | ₹ 1.75 இலட்சம் |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் பப்ளிக் பள்ளியின் 550 மாணவ மாணவியருக்கு | ₹ 27,500 |
| அன்னியாளம், ஜான் பிரிட்டோ பள்ளியின் 1400 மாணவ மாணவியருக்கு | ₹ 70,000 |
| ஜவ்வாதுமலை, தொன்போஸ்கோ மேம்பாட்டு சங்கத்தின் 150 நபர்களுக்கு கேக்குகள் | ₹ 7,500 |
| ஓசூர், செயின்ட் ஜோசப் கல்லூரியின் 1850 மாணவியருக்கு | ₹ 92,500 |
| ஓசூர், மத்திகிரி செயின்ட் சேவியர்ஸ் அகாடெமி பள்ளியின் 450 மாணவர்களுக்கு கேக்குகள் மற்றும் உணவு | ₹ 69,750 |
| ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுவின் 250 ஊக்குநர்களுக்கு கேக்குகள் மற்றும் உணவு | ₹ 45,800 |
| கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளி 275 மாணவிகளுக்கு இடை உணவுகள் | ₹ 88,800 |

**இதுவரை இனிப்பு மற்றும் கேக்குகள் வழங்கியதற்காக ஐ.வி.டி.பி. செலவிட்ட தொகை ரூ. 26.03 இலட்சம்**

## அத்திமுகம், உண்டு உறைவிடப் பள்ளியின் குழந்தைகளுக்கு குளிர் கால உடைகள் மற்றும் புத்தகப் பைகள்

## ₹ 1.03 இலட்சம்



கிருஷ்ணகிரி மாவட்டம், அத்திமுகம் NSCBAV உண்டு உறைவிடப் பள்ளி மாணவர்களின் உடல் நலன் கருதி, அப்பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் **107 குழந்தைகளுக்கு ரூ. 53,500 மதிப்பிலான குளிர்கால உடைகள் மற்றும் ரூ.50,042 மதிப்பிலான புத்தகப்பைகள் என மொத்தம் ரூ.1.03 இலட்சம்** மதிப்பில் வழங்கி உதவியது ஐ.வி.டி.பி நிறுவனம்.




₹ 4.01 இலட்சம்

# கிருஷ்ணகிரி மாவட்ட நூலகத்திற்கு

## ஐ.வி.டி.பி யின் நலப் பணிகள்

ஐ.வி.டி.பி நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டப் பொதுநூலகத்தின் வளர்ச்சிக்காகவும், மாணவ சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் நூலகத்திற்கு பல்வேறு நலப்பணிகளைச் செய்து வருகின்றது.




58வது தேசிய நூலக வார விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் & விருதுகள்

ரூ. **43,250**

கல்வி மற்றும் பொது அறிவு சார்ந்த 46 நூலகப் புத்தகங்கள்

ரூ. **1,01,373**

வாசகர்கள் அமர்ந்து படிக்க மற்றும் எழுதும் வசதியுடன் கூடிய 200 நாற்காலிகள்

ரூ. **2,47,000**

மாணவர்கள் தேர்வு எழுதி பயிற்சி பெறும் வகையில் தேர்வு தாள்கள்

ரூ. **9,440**

இதன் மதிப்பு மொத்தம் ரூ. **4.01 இலட்சம்** ஆகும்.

# வட கிழக்கு மாநிலப் பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகள்

**₹ 41.29 இலட்சம்**

மனிதநேயமும் கல்விசார் பொறுப்பும் இணையும் இடத்தில் தான் உண்மையான சமூக மாற்றம் உருவாகிறது. அந்த மாற்றத்தின் அழகிய எடுத்துக்காட்டாக, வட கிழக்கு மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்காக ஐ.வி.டி.பி தலைவர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் பல்வேறு கல்வி உதவிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேகாலயா மாநிலத்தில், மக்கன்ரூ கிராமத்தில் செயல்படும் ஹோலி கிராஸ் மேல்நிலைப் பள்ளியில் பயிலும்

**660 மாணவ மாணவியருக்கு குளிர்கால உடைகள் (Blankets) - ரூ. 4.17 இலட்சம்**

**ஆசிரியர்கள் சுற்றுலா பயணத்திற்காக ரூ. 1.97 இலட்சம்**

**பள்ளியின் அறிவியல் ஆய்வகத்திற்காக ரூ. 99 ஆயிரம்**

**பள்ளி மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட 4 இன்ட்ராக்டிவ் போர்டுகள் ரூ. 3.30 இலட்சம்**

**மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 660 மாணவ மாணவியருக்கு கேக்குகள் ரூ. 66 ஆயிரம்**



மேகாலயா மாநிலத்தில் இயங்கி வரும் குட் செப்பர்டு மேல்நிலைப் பள்ளியில் பயிலும்

**1184 மாணவர்களுக்கு குளிர்கால உடைகள் (Blankets) ரூ. 7.48 இலட்சம்**

**மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் கணினி ஆய்வகம் ரூ. 12.04 இலட்சம்**

**மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 1184 மாணவர்களுக்கு கேக்குகள் ரூ. 1.18 இலட்சம்**

**அப்பள்ளியில் பணியாற்றும் 47 பணியாளர்களுக்கு டின்னர் செட்டுகள் ரூ. 4.23 இலட்சம்**

**ஆசிரியர்கள் சுற்றுலா பயணத்திற்காக ரூ. 1.97 இலட்சம்**

**பள்ளி மாணவர்களின் கற்றல் திறன் மேம்பட 4 இன்ட்ராக்டிவ் போர்டுகள் ரூ. 3.30 இலட்சம்**



இதுவரை வட கிழக்கு மாநிலப் பள்ளிகளுக்கு ஐ.வி.டி.பி. வழங்கிய கல்விப் பணியின் மொத்த மதிப்பு **₹ 1.58 கோடி**




### பெங்களூர், செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையின்

# பொன் விழாவில் ஐ.வி.டி.பி நிறுவனர்

பெங்களூர், செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மருத்துவ சேவையைத் தொழிலாக மட்டுமில்லாமல், மனித நேயத்தின் உயர்ந்த வடிவமாகக் கருதி ஏழை எளிய மக்களுக்கு தரமான சிகிச்சையை கடந்த 50 ஆண்டுகளாக வழங்கி வருகிறது. நமது ஐ.வி.டி.பி நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு, ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் உயர் சிகிச்சை வழங்கல் பொன்ற சேவையை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அச்சிறப்பு வாய்ந்த மருத்துவமனையின் **50 ஆம் ஆண்டு பொன் விழா நிகழ்வில் தலைமை விருந்தினராக** ஐ.வி.டி.பி நிறுவனர் அவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்.

## பாஞ்சாலியூர் திருநங்கையருக்கு வீடமைப்பு உதவி ரூ.18 ஆயிரம்



'ஒரு வீடு – ஒரு வாழ்க்கை மாற்றம்' எனும் வகையில் பாஞ்சாலியூர் திருநங்கை சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில், வீடு கட்டும் பணிக்காக **லதா** மற்றும் **சர்மிளா** எனும் திருநங்கையருக்கு **60 சிமெண்டு மூட்டைகளை** வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனர்.

## கவிதை

# நன்றி...

நன்றி! எதற்கு என்று யோசிக்க வேண்டாம்
– அனைத்திற்கும் தான் !
சுயநலமாக இருக்கும் மனிதர்களின் நடுவில்
எம்மை போன்ற மாணவர்கள் நலமாக இருக்க வேண்டும்
என்று நினைப்பவர் நீர்!
பாசைகளில் பூத்த தாமரை மலர் போல்
இந்த சுயநலம் மிகுந்த மனிதர்களின் நடுவில்
பூத்த பொக்கிஷ மலர் நீர்!
எம் பள்ளியில் முதல் மூன்று மதிப்பெண் எடுக்கும்
மாணவர்களுக்கு தங்கநாணயம் கொடுப்பேன்
என்று கூறிய தங்கமான மனம் கொண்ட தங்கமகன் நீர்!
'வெற்றி நம் கையில்' மற்றவர்களுக்கு வெறும்
ஒரு புத்தகப்பதிவேடு
எங்களைப் போன்ற மாணவர்களுக்கு மட்டுமே தெரியும்
அதன் 'உன்னதம்' என்னவென்று!
எங்களின் தேவையறிந்து கேட்காமலே உதவி செய்யும்
நீங்களும் 'ஒரு கடவுள்' தான்!
உதவும் உம்முடைய கரங்கள்
பிரார்த்தனை செய்யும் எங்கள் உதடுகளை விட சிறந்தது!
தான் மட்டும் முன்னேறினால் முயற்சியாளன்!
தன்னை சுற்றி இருப்பவர்களையும்
முன்னேற்றினால் தான் வெற்றியானன்!
எங்களைப் பொறுத்த வரை நீர் மாபெரும் வெற்றியாளனே!!!
கடவுளைப் பார்த்ததில்லை என்று நாங்கள் சொல்ல மாட்டோம்,
ஏனெனில் எங்கள் தேவையையும் கஷ்டத்தையும் அறிந்து
இந்த குளிர் காலத்தில் நாங்கள் பயன்படுத்தும்
ஆடையும் தந்து கரம் கொடுத்து உதவும் நீரும்
'ஒரு உண்மையான கடவுள்' தானே! நன்றி.

**மாணவ, மாணவியர்கள்,**
**ஜான் பிரிட்டோ பள்ளி, அன்னியாளம்**

# கணினி மற்றும் தையல் பயிற்சிகள் மூலம் பயனடைந்த IVDP உறுப்பினர்களின் "கருத்துகள்"



என்னுடைய அம்மா **கிருஷ்ணகிரி கிளையில் இயங்கி வரும் பிரித்தி மகளிர் மன்றத்தில்** உறுப்பினராக உள்ளார். ஐ.வி.டி.பி நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட கணினி மற்றும் தையல் பயிற்சிகள் என் வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கு உதவியது. கணினி சார்ந்த புதிய திறன்களை கற்றுக்கொள்ளும் நல்ல வாய்ப்பு கிடைத்தது. பணம் செலுத்தி படிக்க முடியாத காரணத்தால் பயிற்சி பெற முடியாமல் இருந்த என்னை இந்த கணினிப் பயிற்சி வகுப்பு Business Women ஆக மாற்றியுள்ளது. இதனால் எனக்கு தைரியமும், தன்னம்பிக்கையும், சுயமரியாதையும் கிடைத்துள்ளது. **- D.மேகலா**



நான் **கிருஷ்ணகிரி கிளையில் இயங்கி வரும் செந்தமிழ் மகளிர் மன்றத்தில்** உறுப்பினராக உள்ளேன். இந்த பயிற்சியில் நான் க ல ந் து க்கொண்டு என்னுடைய கவலைகளை மறந்து என் திறமைகளை வளர்த்துக் கொண்டேன். இன்று சொந்த கடை வைத்து நன்றாக சம்பாதிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த ஐ.வி.டி.பி நிறுவனர் அவர்களுக்கு நன்றி. **- S. ஹேமாவதி**



என்னுடைய அம்மா **பையூர் கிளையில் இயங்கி வரும் அமுதசுரபி மகளிர் மன்றத்தில்** உறுப்பினராக உள்ளார். நான் ஐ.வி.டி.பி மூலம் அனுமந்தபுரத்தில் இயங்கிய கணினி பயிற்சியிலும், தற்போது கிருஷ்ணகிரி தொழிற்பயிற்சி மையத்தில் தையற்பயிற்சி மற்றும் ஆரிவேலைபாடு பயிற்சியை முடித்துள்ளேன். இந்த தையல் பயிற்சியின் மூலம் என்னுடைய தொழில்முறை திறன் வளர்ந்து, வீட்டிலிருந்தே வருமானம் பெறும் வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. மேலும் நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்தும் பழக்கம் உருவானது. **- S. சாந்தி சீனிவாசன்**

# ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விவரம்

**மார்ச் 2026 வரை**

| ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் | ஐ.வி.டி.பி. கிளைகள் | ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் | ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு |
|---|---|---|---|---|
| ✦ கிருஷ்ணகிரி<br>✦ தர்மபுரி<br>✦ திருப்பத்தூர்<br>✦ வேலூர் | 82<br>சுய உதவிக்குழுக்கள்<br>14408 | 2,53,623 | ₹ 1732.57 கோடி | ₹ 1098.85 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2025 வரை | ஏப்ரல் 2025 – மார்ச் 2026 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 8,602.64 கோடி | ₹ 1,260.76 கோடி | ₹ 9,863.40 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள் கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ₹ 5,129.11 கோடி | ₹ 259.00 கோடி | ₹ 5,388.11 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 431.34 கோடி | ₹ 95.43 கோடி | ₹ 526.77 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 281.00 கோடி | ₹ 14.90 கோடி | ₹ 295.90 கோடி |
| **மொத்தம்** | ₹ 14,444.09 கோடி | ₹ 1,630.09 கோடி | ₹ 16,074.18 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

| விவரம் | மார்ச் 2025 வரை | ஏப்ரல் 2025 – மார்ச் 2026 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி | ₹ - | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி | ₹ - | ₹ 2.00 கோடி |
| மருத்துவமனை, சிறைகள் தொழுநோயாளிகள். முதியோர் இல்லம். கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ₹ 3.47 கோடி | ₹ 16.92 இலட்சம் | ₹ 3.64 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ₹ 68.43 கோடி | ₹ 7.06 கோடி | ₹ 75.49 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள் : குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, ஊக்குநர் பரிசு, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள், தையல் பயிற்சிகள் & கணினி பயிற்சி, வெள்ள நிவாரணப் பணி, விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை | ₹ 11.42 கோடி | ₹ 2.61 கோடி | ₹ 14.03 கோடி |
| பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள் | ₹ 9.75 கோடி | ₹ 83.12 இலட்சம் | ₹ 10.58 கோடி |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம். அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ₹ 17.38 கோடி | ₹ 83.43 இலட்சம் | ₹ 18.26 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ₹ 25.83 கோடி | ₹ 3.81 கோடி | ₹ 29.64 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ₹ 58.42 இலட்சம் | ₹ 9.73 இலட்சம் | ₹ 68.15 இலட்சம் |
| கார்கில் போர். குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா. நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.91 கோடி | ₹ - | ₹ 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ₹ 3.72 கோடி | ₹ - | ₹ 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | ₹ 1.22 கோடி | ₹ - | ₹ 1.22 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் புற்றுநோய் பரிசோதனை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக | ₹ 7.46 கோடி | ₹ 5.11 கோடி | ₹ 12.57 கோடி |
| **மொத்தம்** | ₹ 161.17 கோடி | ₹ 22.52 கோடி | ₹ 181.69 கோடி |


INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT · I.V.D.P · TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

## ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்

9உ சாந்தி நகர் 3ஆவது கிராஸ், கிருஷ்ணகிரி – 635001, தமிழ் நாடு, இந்தியா.

04343-232 129, 236 420 · francis@ivdpkrishnagiri.org · www.ivdpkrishnagiri.org